★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 21 ஷவ்வா 26 இதழ் 174

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6—8—83

## "ஆயுதப்படை விரோதசக்திகள் ஆட்சியை கைப்பற்ற திட்டமிட்டிருந்தன!"

### கலவரப் பின்னணிபற்றி ஜனதிபதி விளக்கம்

(கொழும்பு)

''நாட்டில் ஏற்பட்டிருந்த வன்முறைகள் கட்டுக்கடங்காது போகும் பட்சத்தில் ஆயுதப்படைகளில் இருந்த அரச விரோத சக்திகள் தம்மால் நிர்வாகத்தையும், சட்டத்தையும் சீர்செய்யமுடியுமெனக் கூறி ஆட்சியைக் கைப்பற்ற விருந்தன''.

இவ்வாறு ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று முன்தினம் காலை நடத்திய அரசாங்கக்குழுக்கூட்டத்தில்குறிப்பிட்டார். இக்கூட்டத்தில் ஜனதிபதி நாட்டில் ஏற்பட்டிருந்த வன்முறைகள் எவ்வாறு திட்டமிடப்பட்டிருந்தன என்பதுபற்றி தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர். இக்கூட்டம் சுதந்திர சதுக்கத்திலுள்ள ஜனதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஜனதிபதி ஜெயவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:- ''நாட்டில் தோன்றியிருந்த வன்முறைகள் அவை ஆரம்பமாவதற்கு 3 வாரங்களுக்கு முன்னரே நன்கு திட்டமிட்டிருந்த ».

பின்னர் வன்முறைகளை ஆரம்பிப்பதற்கு சிறந்த சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி வன்முறையாளர்கள் காத்திருந்தனர். அரசியல் குழுக்கள் மூலம் இவ்வன்முறைகளை வியாபிக்கச் செய்யும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது.

#### வன்முறைத்திட்டம்

பல்கலைக் கழகங்களை சேர்ந்த விரிவுரையாளர்கள் சிலர் இவ் வன்முறைத்திட்டத்தின் உள்ளூர் தலைவர்களாக இயங்கிய

(4-ம் பக்கம் பார்க்க)

# அரச, கூட்டுத்தாபன ஊழியரும் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும்!

## பாராளுமன்றத்தில் பிரதமர்

(கொழும்பு)

**சகல அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களும் பிரிவினையைக் கோருவதில்லை என்று சத்தியப்பபிரமாணஞ் செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்ய மறுப்பவர்களின் குடியுரிமை நீக்கப்படுவதுடன், கடுந்தண்டனைகளும்அவர்கள்மீதுவிதிக்கப்படும்.**

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இந்தத் தகவலை பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

அரசியலமைப்பின் ஆருவது திருத்தச் சட்டத்தைச் சமர்ப்பித்து, இதன் மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இச்சட்டம் நேற்று அதிகாலை ஏகமனதாக நிறைவேறியது. 150 வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தன. தமிழர்விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் எவரும் இச்சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

''பிரிவினைத்தடைச் சட்டம் சிங்கள, தமிழ் மக்களைப்பாதுகாக்க மட்டுமல்ல பிரதேச ஒருமைப்பாடு, இன ஐக்கியம் ஆகியவற்றைப் பேணவும் இன்று அவசியம் தேவைப்படுகிறது.

#### பிரிவினைக்கு தடை

''இச்சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் பிரிவினை கோரும் சகல அரசியல் கட்சிகள், இயக்கங்கள் ஆகியன தடைசெய்யப்படும். இத்துடன் இவற்றை ஆதரிப்போர், நிதியுதவி வழங்குவோர் ஆகியோரும் தண்டிக்கப்படுவர்.

''தண்டனைக்குள்ளாகும் பிரிவினைச்சக்திகளுக்கு அவற்றின் மீதான தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்ய அதிகாரம் தரப்பட்டுளளது. ஆயினும் மேன்முறையீடு மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கும்வரை ஏற்கனவே அவற்றுக்கு விதிக்கப்பட்ட தண்டனை அமுலில் இருக்கும்.

பயங்கரவாதச் செயல்கள் ஒரு சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடியவை. எனவே மக்களை பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கவே இப் பிரிவினைவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

---

சாவகச்சேரித் தொகுதியில்

## யாழ் மாவட்டத்தின் முதலாவது அகதிகள் முகாம்

(சாவகச்சேரி)

யாழ். மாவட்டத்திற்கான முதலாவது அகதிகள் முகாம் சாவகச்சேரித் தொகுதியில் உள்ள கைதடி ஆயுள்வேதக் கல்லூரிக்கென ஒதுக்கப்பட்ட மண்டபத்தில அமைக்கப்படவுள்ளது.

இம்முகாமினை நிர்வகிக்கவென சாவகச்சேரித் தொகுதியிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராஜா உட்படப் பல பிரமுகர்கள் பங்குகொண்டிருந்தனர்.

அகதிகள்முகாமிற்கான நிதி, உணவு வகைகளைப் பொதுமக்களிடமிருந்து திரட்டி முகாமினை நல்லமுறையில் நடத்துவதெனவும். இதற்கு உதவியாக 13பேர் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

---

## பொலிகண்டி மீனவரின் சடலங்கள் மீட்கப்பட்டன!

(புலோலி)

பொலிகண்டியிலிருந்து மீன் பிடிக்கச் சென்று படகு கவிழ்ந்து கடலுக்குப் பலியான இரு மீனவர்களினதும் சடலங்கள் கடற்படையினரினதும் மீனவர்களினதும் முயற்சியைத்தொடர்ந்து மீட்கப்பட்டது.

பொலிகண்டியைச் சேர்ந்த மீனவர்களான கணேஷ், தங்க

[4-ம் பக்கம் பார்க்க]

---

## இந்திராவின் நிதானம்: லோகசபையில் பாராட்டு

புதுடில்லி, ஆக. 5

இந்திய லோகசபை கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி சகிப்புத்தன்மையுடன் இருந்தது குறித்து லோகசபைஉறுப்பினர்கள்சிலர் அவருக்கு பாராட்டுத்தெரிவித்தனர்.

அவர்கள், அவசரமுடிவுகள் எதனையும் எடுக்காது நிதானத்துடன் திருமதி காந்தி செயல்பட்டதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் இலங்கை விவகாரம்பற்றி மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடது சாரிகள் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலையைப்பயன்படுத்தி அரசுக்கெதிராகச் செயல்பட முற்பட்டதாலேயே அவர்களது கட்சிகள் தடை செய்யப்பட்டன என்ருர்.

லோகசபை தி. மு. க.உறுப்பினர்கள் இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகள் தீவிரம்போதாதவையாக உள்ளன என்று குற்றஞ்சாட்டினர். (கி)

---

★ பிரான்ஸில் மோதல்கள்

## 3 பேர் பலி; 12 பேர் காயம்

## 80 பேர் கைது!

### இலங்கைத் தூதுவர் அறிவிப்பு

பாரிஸ், ஆகஸ்ட் 5

பிரான்ஸில் கடந்த ஒரு வாரமாக இங்கிருக்கும் இலங்கையரிடையே பலத்த மோதல்கள் ஏற்பட்டிருந்தன. இம்மோதல்களையடுத்து பாரிஸில் மூன்று பேர் கொலைசெய்யப்பட்டனர். பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

இத்தகவல்களை பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர் திரு என். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

அவர்கொடுத்த தகவல்களில் மேலும், மோதல்களில் இறங்கியிருந்த சுமார்80பேர் பிரான்ஸ் பொலிசாரால் கைது செய்யப்

(4-ம் பக்கம் பார்க்க)

---

தமிழ்பேசும் மக்கள் தாக்கப்பட்டது குறித்து

## இ. தொ. கா. ஆழ்ந்த கவலை!

(கொழும்பு)

''இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்கப்பட்டது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிக்கின்றது'' என்று கிராமிய சிறு கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாட்டுமக்களுக்கு வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் நிகழ்த்திய விசேட உரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது: ''இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் காட்டுமிராண்

(4-ம் பக்கம் பார்க்க)

---

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

---

## வர்த்தகர் வீட்டில் ரூ. 2லட்சம்கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் இனந்தெரியாத 7 பேர் புகுந்து அவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு 1 லட்சத்து 95 ஆயிரம்ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் மேற்கில் இக் கொள்ளைச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கொள்ளை நடைபெற்ற வீட்டுக்காரரான கந்தையா குணரத்தினம் என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவரா

(4-ம் பக்கம் பார்க்க)

# ஊரி விளம்பரம்

## விற்பனைக்கு

பட்டி மூடப்பட இருப்பதால் நல்லினப் (பால்இனம்) பசுக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். T. குணரத்தினம், 106, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு.
8110

கொடிகாமம் சந்தியிலிருந்து 400 யாரளவில் றேட் அருகில் 100 பரப்பு காணி தென்னை, பனையுடன் உடன் விற்பனைக்குண்டு. துண்டுகளாகவும் வாங்கலாம். வீ. எம். சோமசுந்தரம், மீசாலை தெற்கு மீசாலை.
8119

28 ஸ்ரீ Single Wheel E L F 250 டிரக். தேக்கு பொடி பிஞன்ஸ் சகிதம் விற்பனைக்குண்டு. 87, ராம் பிரதர்ஸ், கண்டி றேட், கிளிநொச்சி.
8180

## தேவை

துப்பரவான வேப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8120

## மினிபஸ் விபத்தில் காயமடைந்தவர்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் கடந்த 2ம் திகதி இடம்பெற்ற மினிபஸ் விபத்தில் காயமடைந்த நபரொருவர் சுயநினைவற்றநிலையில் யாழ். பெரியாஸ்பத்திரி 7-ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தொண்டர்சபை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணன் தேவஸ்தான தொண்டர்சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: சீ. விநாசித்தம்பி, சபைத்தலைவர்: ச. அப்பாத்துரை, உப-தலைவர்:- ச. நித்தியானந்தம், தனாதிகாரி:- ஆ. தேவராசா, உப-தனாதிகாரி:- ம. அப்பாத்துரை, காரியதரிசி:- ச. சின்னத்துரை, உப-காரியதரிசி:- இ. பாஸ்கரன்.

## பிறந்ததின வாழ்த்து

### உதயேஸ்வரன்

(6 - 8 - 80)

சுதுமலை வடக்கைச் சேர்ந்த மகேஸ்வரன்-உதயகுமாரி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் இன்று தனது 3-வது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். இவரை (யேர்மன்) அப்பா- அம்மா, தாத்தா, அப்பம்மா, யேர்மன் சித்தப்பா, அம்மம்மாமார், சித்தப்பாமார், அத்தைமார், மாமா - மாமிமார், பிரான்ஸ் மாமா, சுற்றத்தார் அனைவரும் பலகலைகளும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள். 8111

# கொள்ளைச் சந்தேகநபர் கைது!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் வழிப்பறி, வீடுடைத்துக் கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்டுவந்ததாகக் கருதப்படும் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரை யாழ். குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் இரு வானொலிகள், மணிக்கூடு, சைக்கிள்கள் அடையாளம் காணப்படாமல் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

கொள்ளைச் சம்பவங்கள் சம்பந்தமாக ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நவரட்னம் சற்குணராசா (26 வயது) என்பவரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்டவராவார். இக் கொள்ளைக் கோஷ்டியின் முக்கிய தலைவராக விளங்குபவர் தலைமறைவாகிவிட்டாராம்.

யாழ். குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த எஸ். ஜோர்ஜுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில், குற்றத்தடுப்புப் பிரிவுபொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரன் தலைமையில் சார்ஜன்ட் எட்வேட், கான்ஸ்டபிள் எஸ். இரத்தினசபாபதி ஆகியோர், கொள்ளைச் சந்தேகநபரைக் கைது செய்து விசாரணை செய்தபோது பல கொள்ளைச் சம்பவங்கள் தெரியவந்துள்ளதாம்.

திருநெல்வேலி 'நேர்ஸிங் ஹோமில்' தங்கியிருந்த தாதி திருமதி எஸ். பூமணி என்பவருடைய விடுதி அறைக்குள் கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 10 ஆயிரம்ரூபாபெறுமதியான நகைகள், சேலைகள்; சின்னக் கடையைச் சேர்ந்த க. வைத்தி டெனிசி என்பவருடைய 4,750 ரூபா பெறுமதியான ரேப் றெக்கோடர்; பொம்மை வெளியைச் சேர்ந்த முகிதீன் மீறுன் என்பவருடைய 2,500 ரூபா பெறுமதியான வானொலி மேலும் 5 வானொலிகள், சைக்கிள்கள் கைக்கடிகாரங்கள் என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தன.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டதும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் விற்கப்பட்ட இடங்களிலிருந்துபொலிசார் மீட்டுள்ளனர். பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். (மா)

## FURTHER EDUCATION FOR GIRLS

## பெண்களுக்கான மேலும் கல்வி

1983ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்,

வகுப்புகள் கிழமை நாட்களில் மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை நாடத்தப்படும்.

நடாத்தப்படும் வகுப்புகள்பின் வருவனவாகும்:

1. பிரத்தியேக ஆங்கில வகுப்புகள்:
இதில் மேல்நாட்டு சங்கீத, ஆங்கில ஆசிரியர் சபையினுல் நடாத்தப்படும் சங்கீதம், பேச்சுபோன்ற பரீட்சைகட்கு மாணவரை ஆயத்தம் செய்தல்.
2. மேல்நாட்டுச் சங்கீதம் - வாத்தியங்கள்
3. கணனி விஞ்ஞானம் - (கொம்பியூட்டர்)
4. மனையியல் 5. தட்டச்சு - சுருக்கெழுத்து (Pitman)
6. கீழைத்தேச சங்கீதம் - வாய்ப்பாடல்,
7. வீணை 8. வயலின் 9. பரத நாட்டியம்
6—9 வரையுள்ள பாடங்களுக்கு மாணவரை வட இலங்கைச் சங்கீதசபையால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்தல்.
10. க. பொ. த. (உ. த.) விஞ்ஞான வகுப்புகள்
11. க. பொ. த. (உ. த.) வர்த்தக வகுப்புகள்

விண்ணப்பங்கள் ஆவணி 27-ம் திகதியுடன் முடிவடையும். குறிக்கப்பட்ட தொகையினருக்கே இடம் கிடைக்குமாதலால் நேரத்தோடு விண்ணப்பிக்கவும்.
முக்கிய குறிப்பு: விடுதி வசதி உண்டு.
விண்ணப்பப் பத்திரங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

R. J. Mann
திட்ட அதிகாரி

8122

## இரண்டாவது பிறந்ததின வாழ்த்து

### இ. ரவிசங்கர்



கொட்டடியைச் சேர்ந்த இராசதுரை புவனேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ரவிசங்கர் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 5-8-83 இல் குதூகலமாகக் கொண்டாடினுர், இவரை பெற்றோர், உற்றோர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி அருளால் நலனும் கல்வியும் செல்வமும் பெற்று நீடூழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றனர்.

8121

# இன்றைய பலன்

ஆடி 21ம் திகதி
சனிக்கிழமை
(6 – 8—83)

மேடபம்: இதயம் இன்று இன்பத்தால் விம்மும் குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும் அன்பு கொண்டதாக இருக்கும், புத்திரர்களாலும் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு.

இடபம்: தூரதேசவாசம் உங்களைத் துயத்தில் ஆழ்த்தும், எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழுகுபவர்களுக்கும் அவதானம் வேண்டும்.

மிதுனம்; பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவிசெய்யப் போய் உபத்திரத்தைத் தேடிக் கொள்வீர்கள். அரசபயத்துக்கு இடம் ஏற்படும் ஆகையால் கவனம் வேண்டும்.

கடகம்: நினைத்தது நடக்கும். இனபந்துக்களின் கொண்டாட்டமுண்டு, பெரியவர்களின் மூலம் பெரும் மதிப்புக் கிடைக்கும். வியாபார விருத்திக்கும் வெளியிடத் தொடர்புக்கும் இடமுண்டு,

சிங்கம்: பகைவர்கள் பதுங்குவர் பாதையில் பழுதுண்டு, நம்பிக்கைமோசடிமூலம் பணம் பறிபோகலாம், முன்னெச்சரிக்கையுடன் செயலில் ஈடுபடவும் பொறுமை நன்று.

கன்னி: வசதிகள் பெருகும் வரவில் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் பெருகும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு பெருகும், ஆவலுடன் எதிர்பார்த்த வாகனம் இன்று கிடைக்கும்.

துலாம்: அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராச்சிகளில் ஈடுபட விரும்புவீர்கள். விருந்தினர் வருகை மகிழ்ச்சியைத் தரும். எதிர் பார்த்ததிலும் பார்க்க கூடுதலான பணம் கிடைக்கும்.

விருச்சிகம்: நம்பிக்கை மோசடி நடக்கும். வியாபாரத் துறையில் நஷ்டமேற்படலாம். அதிக முதலீட்டைத் தவிர்த்து கொள்ளவும். சிலருக்கு வாதரோகம் தென்படும்உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

தனு: கன்னல் போல் இனிக்கும் வாழ்க்கை காதலில் வெற்றியுண்டு பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும் இல்லத்தில் இணைப்புகள் இறுகும் வெளியிடத் தொடர்புகளும் இருக்கும்.

மகரம்: மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும், அன்பான சகோதரத்தின் உள்ளம் பாதிக்கப்படலாம் அபாயகரமான காரியங்களைத் தவிர்க்கவும்.

கும்பம்: பிதாவழிச் சுகம் கிடைக்கும் உயர்ந்த எண்ணங்கள் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும் கால் நடை விருத்திக்கு இடமுண்டு,

மீனம்; கடமையாற்றுமிடத்தில் புதிய நண்பர்களின் தொடர்பு பெருகும் வேண்டிய ஒருவரின் செய்தி தப்பாமல் கிடைக்கும்,

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## காய்கறி விலைகள் குறைந்துள்ளது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தையில் காய்கறி மற்றும் பொருட்களின் விலைகள் பெருமளவு குறைந்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் மரக்கறிகளின் விலைகள் பெருமளவு அதிகரித்திருந்தமையால், மக்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியிருந்தனர்


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குறொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)
போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானுலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

# ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கு கடுதாசிகளில் சோறு!

## கோப்பைகளில் வழங்க உத்தரவு

(பண்டத்தரிப்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கும் மற்றும் சிறு சேவையாளர்களுக்கும் உணவுகள் வழங்கப்படும்போது சுகாதாரதிணைக்களத்திஞல் அங்கீகரிக்கப்பட்டதும், நடுத்தர அளவிலானதுமான கோப்பைகளில் மாத்திரமே உணவு (சோறு) வழங்கப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட சுகாதாரசேவைகள் கண்காணிப்பாளர், கண்டிப்பான உத்தரவொன்றைசுற்றறிக்கை மூலம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளார்.

அண்மையில் தமது பிரிவிலுள்ள பல்வேறு அரசினர்ஆஸ்பத்திரிகளிலும், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளிஞல் நடத்தப்பட்ட திடீர்ப்பரிசோதனையின்போது வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளருக்கு வழங்கப்படும் உணவு (சோறு) கடதாசிகளில் வைத்தும் சிறு சிறு பாத்திரங்களில் வைத்தும் வழங்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும், இனிமேல் நோயாளருக்கும், ஆஸ்பத்திரி சிற்றூழியர்களுக்கும் சுகாதாரத்திணைக்களத்திஞல்அனுமதிக்கப்பட்ட நடுத்தர அளவிலானகோப்பைகளிலேயே உணவு வழங்கப்படவேண்டுமென்றும் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


மஞேகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ஹரன் (யாழ். நகர்)
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் துணை
(கலர்)

ராஜா (யாழ்நகர்)
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்


## விலைகளை அதிகரிக்க வேண்டாம்

(சாவகச்சேரி)

'தற்போதைய நெருக்கடி நிலையினைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களின் விலையினை அதிகரித்து மக்களுக்கு மேலும் தொல்லையையும் துன்பத்தையும் கொடுக்க வேண்டாம், என சாவகச்சேரி வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு, சி. நவரத்தினம் சாவகச்சேரிவர்த்தகர்களுக்கு விடுத்த செய்தியில் கேட்டுள்ளார்.


சாந்தி [யாழ் நகர்]
தினசரி காலை 10-30 காட்சி மட்டும்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
சிவாஜி லட்சுமி "தியாகம்" ஈஸ்ட்மென் கலர்

வெலிங்டன்
(யாழ். நகர்)
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
விஜயன் - சந்தியகலா
த னி ம ர ம்

ராணி (யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
காலை 10-30 மணிகாட்சி மட்டும்
விஜயகுமார் - ஜெய்கணேஷ் - லதா - நாகேஷ்-சுபாஷினி
நடித்த
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தம்புதிய வண்ணப் பிரதி)

REGAL ரீகல்
10-00 a. m. only. Show ends at 12-30
"GIRL FROM INDIA"
காலை 10-00 மணிக்காட்சி மட்டும்
இக்காட்சி 12-30 க்கு முடிவடையும்


# 1000 உல்லாசப் பயணிகளே நாட்டில் உள்ளனர்!

## வருமானம் பெரிதும் வீழ்ச்சி!!

(கொழும்பு)

இலங்கையில் நிகழ்ந்த வன்முறைகளால் உல்லாசப் பயணத்துறைக்கு பலத்த வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. என்று ராஜாங்க அமைச்சு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அந்த அறிக்கையில் வழமையாக இக்காலகட்டத்தில்சுமார் ஐயாயிரத்துக்குமதிகமான உல்லாசப் பயணிகள் வருவார்களென்றும், கண்டி எசலபெரஹர நெருக்குவதால் மேலும் இத்தொகை அதிகரிக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இலங்கையில் ஆயிரம் உல்லாசப் பயணிகள் மட்டுமே இருக்கிறூர்கள். இவர்களை விமானப்பயணங்களுக்கு கொண்டு சேர்க்கும்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு ள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் வாடகை விமான சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## மருந்துத் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, சங்காணை வட்டுக்கோட்டை, அளவெட்டி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளில் பலத்த மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடமூன்றும் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை சுகாதாரப் பகுதியினர் இதுவரையில் வைத்தியசாலைக்குக கொண்டுவந்து விநியோகிக்கவில்லை என்றும்இதஞல் நோயாளர்கள் பெரும் சிரமம் அடைவதாகவும் இதுபற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

இதஞல் பொதுமக்கள் தனியார் மருத்துவ நிலையங்களை நாடவேண்டியதுர்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது.

## சேவை நலம் பாராட்டு விழா

(அனலைதீவு)

அனலைதீவு வடலூர் அ.த.க வித்தியாலயத்தில் கடந்த ஏழு ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு க.இளையதம்பியின் சேவைநலம் பாராட்டு விழா வித்தியாலய மண்டபத்தில் வைத்திய கலாநிதி சி.விஸ்வேஸ்வரஐயர் தலைமையில் நடைபெற்றது.

புதிய பாடசாலை அதிபர் திரு பி.சுந்தரம் வாழ்த்துமடல் வாசித்தளித்தார். பிரபல வர்த்தகர் திரு ஆ.வே.கணபதிப்பிள்ளை பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். திரு பொ.க.மார்க்கண்டு பொற்கிழி வழங்கிச்சிறப்பித்தார்.

இளைப்பாறிய அதிபரின் சேவைகளைப் பாராட்டி வைத்திய கலாநிதி எஸ்.சர்வானந்தா, திரு ஐ. வைத்தியலிங்கம், அதிபர் திரு செ.நல்லையா, ஆசிரியர் திரு தி.இரவீந்திரன், திரு மு.வே.மயில்வாகனம் ஆகியோர் உரைவழங்கினர். (அ)

## அகதிகள் முகாம்களிலிருப்போர் எண்ணிக்கை குறைகிறது!

### டக்ளஸ் லியனகே தகவல்

(கொழும்பு)

கொழும்பிலும் பிற மாவட்டங்களிலுமுள்ள அகதிகள் முகாம்களிலுள்ளவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவருவதாக ராஜாங்க அமைச்சுசெயலாளர் திரு. டக்ளஸ் லியனகே தெரிவித்தார்.

திரு. லியனகே இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது: "அகதிகள் முகாம்களிலுள்ளவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துவருகிறது. அகதிகள் முகாம்களில் பலர் போவதும் வருவதுமாக இருப்பதால் அவற்றில் எவ்வளவு பேர் மொத்தமாக இருக்கிறூர்கள் என்பதைக் கணிப்பிடுவது சிரமமாகவுள்ளது.

பலர் வெளியிடங்களுக்கும் சென்று உணவருந்தியபின்னர் மீண்டும் பாதுகாப்புக் கருதி முகாம்களுக்கு வருகிறூர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முகாம்களிலிருந்து தமது இல்லங்களுக்குச் செல்லவிரும்புவோரை பாதுகாப்பாக கூட்டிச்செல்லவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கும், மட்டக்களப்புக்கும் இதுவரை சுமார் 4000 பேர்வரைஅனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அங்கு செல்லவிரும்புவோரை கப்பல்களில்ஏற்றும்பணியும் தொடர்ந்துஇடம்பெறுகிறது" என்றூர்.

அகதிகள் முகாம்களிலுள்ள பலருக்கு வெளியேயிருந்து பலர் உணவுப்பண்டங்களைக் கொண்டுவந்து வழங்கி உதவுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## பல்கலைக்கழக மாணவர்கள் சொந்தஊர் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திலும் பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் படித்த மட்டக்களப்பைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பாதுகாப்பாக ஏழு பஸ்களில் சொந்த இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு டிப்போவைச் சேர்ந்த பஸ்களே கடந்த புதன்கிழமை பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் வந்திருந்தது.

நேற்று வெள்ளிக்கிழமை அதே ஏழுபஸ்கள் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த வடபகுதி அகதிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. யாழ்ப்பாணத்திலிருக்கும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் நேற்று மாலை மட்டக்களப்பு சென்றனர். (மா)





வியாபாரிகளுக்கு சலுகையான கழிவு
கொடுக்கப்படும்

| | | பெரியசைஸ் | நடுத்தரசைஸ் | சிறியசைஸ் |
|---|---|---|---|---|
| சூப்பர் | – | 14.90 | 12.90 | 10.90 |
| டீலக்ஸ் | – | 16.90 | 14.90 | 12 90 |
| ரோயல் | – | 22.90 | 20.90 | 17.90 |

ஜெனித் டிரேட்ஸ் லிமிடெட்
245 1-B காலிவீதி கொழும்பு-4.

## மணிவாக்கு

''உடல் வருந்தி உழைத்து, இயற்கையுடன் போராடி, சீவாதாரமான பொருட்களை உண்டாக்குதலே, எவரும் மறுக்கொணாத மனிதனது முதற்கடமையாகும்.

— லியோ டால்ஸ்டாய்

# தமிழர் பொற்காலத்தின் முப்பெருந் தலைவர்கள்

கிரேக்க சிந்தனையாளன் பிளேட்டோ ஒரு தத்துவ ஞானி. 'மனித வாழ்க்கையோடியைந்த அரசியல் என்ற ஒரு தத்துவத்தை அமைத்துக் காட்டினான்'.

அவனுக்குப் பின்னர்வந்த 'அரிஸ்டாட்டில்' 'பிளேட்டோவின் தத்துவம் சிந்தனைக்குஒருநல்விருந்து. ஆனால் செயற்படுத்த முடியுமா? முடியாது எனக் கூறி மறுத்தான். இவ்வாறு ஒரு புதிய குறிக்கோளை அமைத்துக் காட்ட வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு இல்லை. எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் எங்கள் அருளாளர்கள் கட்டுக்கோப்பாக அமைத்து வந்த குறிக்கோளும் வழியும் மாற்றியமைக்கப்பட வேண்டுவன அல்ல

இந்த அடிப்படைக் கருத்தில் இலங்கைத் தமிழர்களின் கடந்த 150 ஆண்டு வரலாற்றை அவதானித்தால் ஆங்கில ஆட்சிக் காலத்திலேயே அழியாப் புகழை ஈட்டித்தந்த முப்பெருந் தலைவர்களை நாடும் நாமும் என்றும் மறப்பதற்கில்லை.

தமிழர் வரலாற்றை உலகளாவிய நிலையில் உருப்படுத்திய மகாவீரன் இலங்கைச் சட்டசபையின் முதற் தமிழ்ப் பிரதிநிதி குமாரசுவாமி முதலியாரின் மகன் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களே. லண்டனில் முதலாவதாக பாரிஸ்டர் பட்டம் பெற்ற ஆசியரும், ஆசியாக் கண்டத்தில் முதலாவதாக சேர் பட்டம் பெற்றுக் கௌரவிக்கப்பட்டவரும் அவரே.

நடை உடை தோற்றத்தில் ஒரு ஆங்கிலப் பிரபு போலிருந்தாலும் இந்து கலாசார வாழ்வில் மிக ஆழமாக உளம்பதிந்த பெரியோன் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள்,

இலங்கைச் சட்டசபையில் 1862 தொடக்கம் இறக்கும்வரைக்கும் 1879 தமிழர்பிரதிநிதியாகஅகிலஇலங்கைக்கும் அரும் பணியாற்றினார்.

இங்கிலாந்தில் அக்காலம் செல்வாக்குப் பெற்றிருந்த பிரபுக்கள், அறிஞர்கள் பாமஸ்டன் டிஸ்ரெயிலி போன்ற ஆங்கிலப் பிரதமர்கள் சேர் முத்துக்குமாரசாமியின் ஆப்த நண்பர்கள். விக்டோரியா ராணி ஆங்கிலச் சாம்ராச்சியத்தின் தலைவியாகத் திகழ்ந்த காலத்தில், தாம் ஆங்கிலத்தில் எழுதிய 'அரிச்சந்திர' நாடகத்தை ராணிக்கு அர்ப்பணித்து அவருக்கு நேரில் கையளித்த பெருமையுடைய பெரியோன்,

அதனினும் மேலாக அவர் அத்தருணத்தில் நிகழ்த்திய சிற்றுரையில் அகில உலகின் அரசுகளும் சத்தியத்தின் அடிப்படையில் ஆட்சி நடத்த வேண்டுமென்ற அவாவினால் தாம் அந்த நாடகத்தை எழுதினதாகக் குறிப்பிட்டார். கேட்டோர் பரவசப்பட்டனர்.

'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற அப்பர் அடிகளின் தத்துவம் அவா உள்ளத்தில் ஊற்றெடுத்ததை அவருடைய சிந்தனை, பேச்சு, செயல் யாவும் விளக்கின. தாயுமானவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மேனாட்டில் பரப்பினார்.

அரை வயதில் அமரத்துவம் அடைந்த இப்பெரும் தலைவன்பற்றி அன்றைய ஆங்கில தினசரிகள் 'இருநூறு லட்சம் திராவிடமக்களின் பேரபிமானத்துக்குரிய பெருந்தலைவன்' என்ற தலையங்கம் தீட்டின. இத்தகைய அதிமனிதனின் மகனே கலாயோகி ஆனந்த குமாரசுவாமியென்பதில் என்ன அதிசயம்.

சேர் முத்துக்குமாரசுவாமியின் மறைவால் உண்டான பெருவெளியைநிரப்ப வந்தவர் அவரின் மருமகன் சேர் பொன்னம்பலம்இராமநாதன்.

தமிழ் இனத்தின் தலையாய பிரதிநிதியாக இவரைத் தெரிவு செய்வதில் கடினமாக உழைத்து வெற்றி கண்டவர் இந்து சமயத்தின் சிறந்த சீர்திருத்தவாதி நல்லைநகர் ஆறுமுகநாவலர்.

மாமனுக்கும் மருமகனுக்கும் ஒரு மாபெரும் அருளியல் பாலம்போன்றவர் நாவலர் பெருமான்.

சேர் இராமநாதன் (1879-1930) ஐம்பத்தொரு வருடம் சட்டசபையிலிருந்து இலங்கையின் தேசிய கலாசார, சமய வரலாற்றிலே நிகழ்த்திய சாதனைகளை இருந்து பார்க்க நாவலருக்கு வாய்ப்புக் கிட்டவில்லை.

சுவாமி விவேகானந்தருக்குப் பின் அமெரிக்காவில் இந்து சமயம்பற்றிய பேருரைகள் நிகழ்த்திய பேரறிஞர் இராமநாதன். இலங்கை அரசியலில் பௌத்த, முஸ்லிம் மக்களின் புனர் வாழ்வுக்குப் பல சீர்திருத்தச் சட்டங்களுக்குக் காரணமாயிருந்தவர்.

1915ம் ஆண்டில் நிகழ்ந்த சிங்கள - முஸ்லிம் கலவரங்களில் அடக்குமுறைச் சட்டம் (Martial Law) பிரகடனப்படுத்தப்பட்டு பல சிங்களத் தலைவர்கள் சிறையிலிடப்பட்டும், பலர் கொல்லப்பட்டபோதும், இங்கிலாந்து சென்று சிங்கள மக்களைச் சிறைமீட்டதுடன், அவர்களுக்கு அநியாயம் விளைவித்த தேசாதிபதியைத் திருப்பி அழைக்கவைத்தார்.

நாவலர் பெருமான் சைவ நீதி நாடெலாம்பரவவேண்டுமென்ற உறுதி வாழ்க்கை வாழ்ந்தவா. அன்னியஆட்சிகள் அழிக்கமுயன்ற எங்கள் கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதில் அற்புதம் நிகழ்த்தியவர் - தமிழர்களின் தலைமைசால் சீர்திருத்தவாதி; தமிழகத்தில்இவ்வித தொண்டுசெய்தவர்; ஒழுங்கீனங்களைக்கண்டித்த சைவ சித்தாந்தச்சிங்கம்.

சேர். முத்துக்குமாரசுவாமியும், மருகர் இராமநாதனும் நாவலர் வழியில் நின்று அரசியல் பணிகளை திறம்பட ஆற்றிய பெருந் தலைவர்கள்.

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தங்கள் தேசிய, சர்வதேச பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு, தமிழ்இலக்கியமரபு, சைவ மரபு தழுவிய தலைமை தமிழர்கள் மட்டுமல்ல இலங்கை மக்கள் அனைவரும் ஏற்றுப் போற்றியதே!

''நமச்சிவாய''

## அரச கூட்டுத்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### நம்பிக்கை ஒளி

''எம்மீது கருமேகங்கள் காணப்படுகின்றபோதிலும் அம் மேகங்களின் எல்லையில் நம்பிக்கைஒளி காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இவ்விவாதத்தில் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் பிரிவினையை எதிர்க்கிறார்கள். முஸ்லிம் மக்களும் பிரிவினையை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே தீவிரவாதிகள் தமது ஆயுதங்களைக் கைவிட்டபின்னர் சரணடைய வேண்டும் என்றார்.

### மைத்திரி பேச்சு

மதவாச்சி தொகுதி உறுப்பினர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா உரையாற்றுகையில் கூறியதாவது: ''பிரிவினைவாதம்தடைசெய்யப்படுவதை எனது கட்சி ஆதரிக்கிறது. தமிழீழப் பிரிவினை இயக்கம் எப்போதோ தடைசெய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அதனைத் தடைசெய்வதில் காலதாமதம் காட்டப்பட்டதாலேயே இன்று வன்முறைகள் தோன்றியுள்ளன.

பிரிவினைவாதம் தடைசெய்யப்படுவது, தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணுவதாக அமையும் என்று ஏற்றுக்கொள்ளமுடியாது'' என்றார்.

### அநுரா பேச்சு

நுவரேலியா, மஸ்கேலியா இரண்டாவது தொகுதி எம்,பி திரு. அநுரா பண்டார நாயக்கா பேசுகையில் கூறியதாவது:

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரிவினையை எதிர்க்கின்றது. ஆகையினால் இச்சட்டத்தை ஆதரிக்கின்றது.

அண்மையில் நடந்த கலவரங்களால் இலங்கைக்கு வெளிநாடுகளில் அவப்பெயர்கிடைக்கும் நிலை காணப்படுகிறது. எனவே, நாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தாத வகையில் வெளிநாடுகளில் உள்ள எமது தூதுவர்கள் நமது நாடு பற்றி சிறந்த பிரசாரங்களை ஆரம்பிக்க வேண்டும்'' என்றார்.

கல்குடாத் தொகுதி உறுப்பினரும், உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் பேசுகையில் கூறியதாவது:-

''புதிய திருத்தச் சட்டம் தமிழ், சிங்கள இனங்களிடையே ஒற்றுமையை வளர்க்கும். இந்த அரசாங்கமே வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழை நிர்வாக மொழியாக்கியுள்ளது என்பதனைத் தமிழ்மக்கள் நினைவில் வைக்க வேண்டும்'' என்றார்.

அமைச்சர் திரு. தொண்டமானும் உரையாற்றினார். இவ் விவாதம் அதிகாலைவரை 13 மணித்தியாலங்களுக்கு இடம் பெற்றது.

கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம சபையில் சமூகமளித்திருந்தபோதிலும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது சென்றுவிட்டார்.

பாராளுமன்ற விவாதங்கள் நடைபெற்ற வேளை பாராளுமன்றத்துக்கு வெளியே பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. (கி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம் 6-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telegram: 22389—24126.

## இ. தொ. கா.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டித்தனமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளியினர் பெரும்பாதிப்புக்களுக்குள்ளாகியுள்ளனர். இந்தத் துக்ககரமான நிலையில் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும்மக்களிடம்தீரத்துடன் அவர்களுக்கு நேர்ந்த துன்பங்களுக்கு முகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்வதைத் தவிர வேறெதனையும் தெரிவிக்கமுடியாதுள்ளது.

தமிழ் மக்கள் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளபோதிலும் பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்கள் தமிழ்மக்களுக்கு மனிதாபிமான உணர்வுடன் பல உதவிகளை வன்முறைக் காலங்களில் வழங்கியுள்ளனர். அவர்களுக்கு இ. தொ. க. தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது'' என்றார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கும் பணிகள் தீவிரமாக்கப்படுகிறது என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். (கி)

## 3 பேர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதுபற்றி அறிந்த இலங்கை பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு டிரோன் பெர்னாண்டோ இலங்கையிலுள்ள பிரெஞ்சுத் தூதுவரை அழைத்து பிரான்சில் இடம்பெறும் வன்முறைகளிலிருந்து இலங்கையர்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்கும்படி பிரான்ஸ் அரசிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலளித்த பிரெஞ்சுத்தூதர் தாம் அவ்வாறு செய்வதாகக் கூறியதுடன் இலங்கையர்களின் பாதுகாப்புக் குறித்து தமது அரசு தகுந்தநடவடிக்கைகளை எடுக்குமென்றும் உறுதியளித்தார். (கி)

## வர்த்தகர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வார்.

தோள்மூட்டில் ஏற்பட்ட துப்பாக்கித் சூட்டுக் காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவ தினமிரவு 7 இனந் தெரியாத நபர்கள் மேற்குறிப்பிட்டவரின் வீட்டுக்குள் புகுந்து அரிசி விற்பனவ சம்பந்தமாக அவருடன் வாக்குவாதப்பட்டதாகவும் பின்னர் அவரின் தோள்மூட்டை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுவிட்டு 1 லட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாகவும்பொலிஸ் விசாரணைகளிலிருந்துதெரியவந்துள்ளது.

இக்கொள்ளை சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிசார் தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்றனர். (மா)

## பொலிகண்டி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ராசா, பாபு ஆகிய மூவரும் படகில் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றிருந்தனர். பருத்தித்துறை வெளிச்சவீட்டிலிருந்து சுமார் 10 மைல் தூரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கடும் காற்று வீசியதால் படகு கவிழ்ந்தது. தங்கராசாவும் பாபுவும் கடலில் அமிழ்ந்தனர். கணேஷ் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தபோது தெய்வாதீனமாக வந்த கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

கடலில் மாண்ட ஏனைய இருவரினதும் சடலங்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

கடற்படையினரும், மீனவர்களும் மேற்கொண்ட தேடுதல் முயற்சியைத் தொடர்ந்து இரு சடலங்களும் மீட்கப்பட்டன.

## ஆயுதப்படை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையும் அறியமுடிகின்றது. நாடு மூன்றுபிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா ஐநூறு பேராக மொத்தம் 1500பேர்வன்முறைகளைக் கட்டவிழ்க்க நியமிக்கப்பட்டிருந்தனர்.

இம் மூன்று பிரிவுகளுக்கும் ஒவ்வொரு தலைவர்கள் இருந்தார்கள். இவர்களின் முக்கிய பணி தமது பிரிவின் கீழ்வரும் பகுதிகளிலுள்ள ஒரு பிரபல கேடியின் உதவியுடன் குழப்பத்தைக் கட்டவிழ்ப்பதாகும். இதற்கென அக்கேடிகளுக்கு பெருமளவு பணமும் வழங்க ஏற்பாடாகியிருந்தது.

### வடபகுதிதொடர்பு

வன்முறைக்காரர்கள் வடபகுதி பயங்கரவாதிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார்களா என்பது பற்றி எதுவும் சரியாகத் தெரியவில்லை. அத்துடன் அங்கு ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டது வன்முறைக்காரர்களின் தூண்டுதலாகுமா என்பதும் தெளிவாகதெரியவில்லை.

ஆயினும் யாழ்ப்பாணச் சம்பவமே வன்முறையாளர்களுக்கு தமதுநடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட ஏற்ற சந்தர்ப்பமாகியது.

அங்கு கொல்லப்பட்ட இராணுவவீரர்களின் சடலங்களை அடக்கஞ்செய்ய கனத்தை பொதுமயானத்துக்கு கொண்டு சென்றபோது அவ்வீரர்களின் உறவினர்கள் அழுதவண்ணமிருந்தனர். அவர்களிடம் அங்கு கூடிநின்ற காடையர்கள் சடலங்களை புதைக்க அனுமதிக்க வேண்டாமெனக் கூறி கலகஞ்செய்ய ஆரம்பித்தனர். இதனால் பொலிசார்கள் சிலர் காயமடைய நேரிட்டது. [கி]

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி - கதிரவேலு

இல: 46 பலாலி வீதி, கந்தர்மடத்தில் வசிப்பவரும், அரசாங்க அச்சகத்தில் கடமையாற்றி இளைப்பாறியவருமாகிய சி. கதிரவேலு 1-8-1983 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன்பு மனைவி திருமதி க. ஞானம்மாவின் கணவரும், திருமதி நடராசா பத்மாவதி, திருமதி கிருஸ்ணசாமி - பரமேஸ்வரி, திரு. க. இரவீந்திரக்குமார் (யாழ். பெற்றோலியம் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் தகப்பனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் சகல கிரியைகளுடனும் 1-8-83 திங்கட்கிழமை கோம்பயன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 8123